பரஞ்ஜோதி

ஞானவள்ளல்

பரஞ்ஜோதி மஹான்

அருளியது.

பரிபூரண பரஞ்ஜோதியின்

உயர்ஞான சபையோரால்

வெளியிடப்பட்டது.

ஐஸ்வரி பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

உரிமைப் பதிப்பு. (ACT XXI of 1860) மார்ச் 1944.

(Copy Right Reserved)



ஞான வள்ளல்

பரஞ்ஜோதி மஹான்

ஜோதி.

ஞான வள்ளல் **பரஞ்சோதி** மஹான் அவர்கள் அருளிச்செய்த பிரசங்கப் பொன் மொழிகள்.

ஆதியும், அகண்ட இருளும், அதுவின் தொனியும், **அருட்பெருஞ் ஜோதியும்** அணுவில் ஒடுங்கி, அணுவாய்ப் பிரிந்து, அகில லோகங்களாய் நிறைந்ததின் பின்; ஆதியால் அகண்ட இருளில் அணுவைத் தரித்து, அணுவைத் துளைத்து, அதில் உருவானது நாம்.

ஜோதியின் தத்துவம்.

ஜோதி சொரூபமென்பது அக்கினி சொரூபமே. நினைப்பின் சொரூபமும், நினைப்பின் பீடமும், மகா காரண மென்பதும், அளவிட முடியாத ரூபமென்பதும் அதுவே. பரிசுத்த வெண்மையாயுள்ளதும், வித்தாய் விளைந்ததும், வித்தாயுள்ளதும், எல்லா ஜீவாத்மாக்களுக்கும் இசைந்து, அந்தந்த ஆத்மாக்களுக்குரிய வித்தாய் விளைந்ததும், விளைவதும் அதுவே. இருளில் வெளிச்சமாய் இருப்பதும், இருளில் நிழலாயுள்ளதும், சாயையாயுள்ளதும், தேஜஸா யுள்ளதும், தேஜஸுக்குரியதும், எல்லா ஜீவனுக்குள்ளுள்ள பொருளும், உயிருக்கு ஆதரவாய் உள் பொருளா யுள்ளதும், சுக துக்கத்திற்குக் காரணமாயுள்ளதும் அதுவே. உருவ தோற்றங்களுக்கு மூல நினைப்பின் உருவமாயுள்ளதும், கருவாயுள்ளதும், குருவாயுள்ளதும், அணுவாய்ப் பிரிந்ததும், அணுவில் உள்ளதும், பிரிந்தும் அளவில் குறையாததும் அதுவே. இதுவரையும், இனியும் அழியாததும், பின் அணுவின் முடிவாயுள்ள இடமும், **நமது ஜோதி சொரூபமே சொரூபம்.** (இது அரூப, ரூப இரண்டு நிலைகளையுமுடையது)

மகா காரண லோகம்.

அக்கினி சொரூபமான ஜோதி சொரூபம்தான் மகா காரண லோகம் என்று சொல்லப்பட்டது. இந்த மகா காரணம் என்பது ஆயிரத்தெட்டு மலருக்கு அடிப் படையாயுள்ளது. இதற்கு மூலம் நினைப்பே. நினைப்பிற்கு உருவம் அக்கினி சொரூபமே. இந்த நமது சொரூபம் ஏக சக்தி நிறைந்தது. மேலும், இதுவரை பரம ஜீவ ஆத்ம உருவ அணுக்களாயும், மற்ற உருவ அணுக்களாயும், அணுக்களாய் உருவம் ஆகாத சக்தியும், அணுக்களாகி ரூபம் அழியும் சக்தியும், பரம ஜீவ ஆத்ம அணுக்களாய் இருக்கும் சக்தியும், மற்றும் அணுக்களாயுள்ள சக்தியும், இனி, பரம ஜீவ ஆத்ம அணுக்களாயும், மற்ற அணுக்க ளாயும் ஆகக்கூடிய சக்தியும், இருக்கும் இருப்பிடம் இந்த மகா காரணம் என்னும் நமது ஜோதி சொரூபமே. பரம ஜீவ ஆத்ம அணுவாயுள்ள மனித ரூபங்கள், காரண லோகம், சூக்கும தேவர்கள் லோகம், சரீர லோகங்களுக்கு வந்து, அனேக பிறவிகள் எடுத்து, தன் அனுபவங்கள் எல்லாம் முடித்து, அதிலேயே பக்தர், சித்தர், முக்தர் பதவியின் எல்லா வேலைகளையும் தவத்தின் செல்வத்தால் யாதொரு குறைவும் இல்லாமல் அறிவின் விருத்தியால் முடித்து, ஆயிரத்தெட்டு மலரையும் தாண்டி, அக்கினி சொரூபத்தோடு ரூபம் கலந்து, தன் ஆதியோடு தான் சேர்ந்துகொள்ளுகிறது. இதற்கு ஜீவ ரூப ஐக்கிய முத்தி எனப்படும். இந்த ஜீவ ரூப ஐக்கிய முத்தி அடைந்தவரின் ரூபமோ, பெயரோ அன்றே அழிந்தது. நம்முடைய சபையின் மெய்யுணர்வாளர்கள் அடையும் ஐக்கிய முத்தி, இதுவேயாகும்.

அண்டம் பூத்து, அருள் பூத்து, அண்டமும் பிண்டமும் நிறைந்த ஒரு மொழியும் பூத்து, ஆக்ஞை-யாகிய இடமும் பூத்து, மதி பூத்து, கம்பமும் காரண மயிர்ப் பாலமும் பூத்து, அருளொடு நிறைந்த கருவும் பூத்து, கனமான மெய்யுணர்வும் பூத்து, கபாலமும் பூத்து, கருணைக்குரிய கண்ணின் கண்மணியாயுள்ள கருமணியின் உள்ளுள்ள மாமணியும் பூத்து, கருத்துக்கிசைந்த சூக்கும காரணமும் பூத்து, குறையில்லாக் குணங்கள் பூத்து, நிறைவெல்லாம் நிறைவாக நிறைந்ததின் பின், கடமாகிய இடமாய் இணைந்துள்ள ஸ்தூல பஞ்சபூத அணுக்களும் பூத்து, அன்போடு, அருளோடு, அலையோடு அலையாய் அருட்பெருஞ் ஜோதியினுட் புகுந்து, பூத்த வடிவாய், அங்கிங்கெனாதபடி எங்குமாய் ஏகமாய் இரண்டறக் கலப்போம். கலப்பீர். கருத்து வடிவாகிய நான்–நாம்.

அன்புமயமும், அருள் மயமும், பொருள் மயமும், கருவின் கருமயமும், கடத்தின் மயமும், அன்னமய மென்றறி.

அன்ன மயமும் அன்பு மயமும் அருளிய சொல்லில் அருளோடு அருளாய் கருத்தினுள் கருத்தாய் நின்ற கனமுடையோர் கரு தவமுடையோர் காரணத்தின் கண் கொண்டு அறிந்த அருட்பெருஞ்ஜோதி மயமே.

ஜோதியும் சொரூபமும் சும்மாயிருந்த நம்மின் மயம் தான்.

நம் உணர்வால் கண்டுபிடிக்கப்பட்ட பாக்கியந்தான் இருள். இருள்தான் எங்கும் நிறைந்திருக்கிறது. இருள்

இல்லையேல் நிர்வாகம் இல்லை. நிர்வாகம் இல்லையேல் உலக மில்லை. இருளைப்பற்றிப் பேசுவது அறிவு. ஆகையால் இருளே பரிபூரணம்.

இருளிலுள்ளது ஆதி. ஆதி என்பது நினைவு. இந்த ஆதி அல்லது நினைவு என்ற உயிர், தனது நாதத்தால் அதாவது தன்னுள் இருக்கும் ஓங்கார சப்தத்தால் விழிப் படைந்தது. இதற்கு தன்னோடு ஒத்தாசையாயிருப்பது தன் நாதம்.

ஆனதால் எவ்வுயிரும், எவ்வுலகும், எப்பொருளிலும் இருள் நிறைந்தது; ஆதி நிறைந்தது; நாதம் நிறைந்தது; ஜோதியும் நிறைந்ததுதான்.

அரூப ரூப முழக்கமே மாபெரும் உலகங்களாய் பரிணமித்ததும், அணுக்களாய் பிரிந்ததும் ஜோதியி லிருந்தே. ஜோதி என்பது மரியாதை மிகுந்த சொல். அதையே அக்கினி, நெருப்பு, ஒளி என்றும் கூறலாம்.

இருளில் கிடந்த ஆதி என்ற அரூப ரூப நினைப்பு, தன் நாதத்தால் ஏங்கி ஏங்கி நினைக்க, அந்த மாபெரும் ஏக்கமே அக்கினியாயிற்று. ஆதியினது ஏக்கம் அதிகரிக்க அதிகரிக்க ஜோதியாக மாறியது. இந்த ஜோதியையே மகா காரண லோகமென்றும், அழியாததென்றும், ஒரு சிலரால் கடவுளென்றும், பிர்மமென்றும், அண்ட மென்றும் கூறப்படுகிறது. நமது நினைப்பின் வேகமே ஜோதியாய் பரிணமித்தது. ஜோதியிலிருந்தே அணுக்கள் பிறந்தன, பறந்தன.

அந்தந்த அறிவிற்குத் தக்கவாறு இசைந்து கூடி, விளைந்த வஸ்துவே பரிசுத்த ஜோதி. ஒரு சிறு பெரும் ஏக்கத்தின் வேகமே இவ்வளவு பெரிய ஜோதியாயிற்று. ஜோதியே விந்து; விந்துவே ஜோதி வடிவு. விந்து, ஜோதி இரண்டும் ஒன்றே.

ஒவ்வொரு குணங்களும் தத்தம் இயக்கத்திற்கிசைய விளைவித்து வைத்திருக்கும் ஜோதிப் பொருளை அனுபவிக்கவே அரசாங்கமும், அதற்குரிய பாதுகாப்பும் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. இதை நன்றாக அறிவோடு அனுபவிப்பதற்காகவும், அது பெரும் சிரமம் இல்லாமல் கிடைக்கும் பொருட்டாகவும், சரியை, கிரியை, வணக்கங்கள் கைக்கொள்ளப்பட்டு வருகின்றன. மற்றொரு வகையில் அறிவோடு அனுபவித்துவிட்டு, பின் அருட் பெருஞ் ஜோதிக்கு அப்பாலுக்கப்பால் செல்லவேண்டிய முயற்சிக்கு இச்சரியை, கிரியை யோகங்கள் பாடு படுகின்றன.

இந்த உலக ரூபாரூபங்களெல்லாம் ஜோதி சொரூபமே. இதற்கு உதாரணம் கூறுமிடத்து ஒவ்வொரு விளைந்த வித்திலும், மேல் மாசாகிய தோலை நீக்கினால் உள்ளே தூய வெள்ளை வஸ்துவாக விளைந்திருப்பது ஜோதியே.

தகப்பனின் ஒரு சிறு அணுப்பிரமாணமான விந்துவின் உற்பத்தியே இச்சரீரம். இச்சரீரத்தில் அமைந்துள்ள ஐம்புலன்களின் சேட்டைகளாகிய காம, குரோத, லோப, மத, மாச்சரியம் என்னும் மாசுகளை நீக்கி, ஓர்

மொழியின் நியதிப்படி, ஒ ப் ப ற் ற ஓர் தனிப்பெரும் நெறியில் வழுவாது நின்ருல் ஒவ்வொருவரும் தன் சரீரத்தி லுள்ள பரிசுத்தமான பரஞ்ஜோதிப் பொருளைக் கண் கூடாகக் காணலாம். இது முக்காலும் உண்மை.

தகப்பனின் ஒரு சிறு அணுப்பிரமாண விந்துவாகப் பட்டது, தாயின் இருட்டறையாகிய கருக் குழியில் தங்கினதும், பெண்ணின் நா த வே க வெ ப் பி ன் இரத்தமானது † அத்துடன் கலந்து ஒரு சிறு ரோம அளவில் நேரான கோடாக நீண்டு, அந்த கோட்டின் முடிவில் விளைந்த விந்துவை உச்சியாக வைத்து, அதி லிருந்து உருவ ஸ்தூல அணுக்களைச் சேர்த்து, தனக்கு வேண்டிய அவயவங்களைச் சித்தரித்துக் கொள்ளுகிறது. முதலில் தரித்த இடம் உந்தியாயும், கோடு முடிந்த இடம் உச்சியாயும் இருந்து உருவாகிறது. உருவாகி பிறந்த பின் அக்குழந்தையின் சிரசிலேயே சுமார் 11 அல்லது 13 வயது வரை விந்துவானது வெண்ணிறமாய் பரவி விளைவாகிறது. 13 வயதுக்கு மேற்பட்டு முன் தரித்த தன் இடத்திற்கே இறங்கி வந்துவிடுகிறது. அது இறங்கிய பின்தான் அதின் விளைவு துரிதமாகிறது. அந்த விளைவின் அதிகரிப்புக்குப்பின்தான் விந்து ஸ்கலிதமாகிறது.

---

† (1) பெண் ரூபத்தில் நாதம் வியாபகமாய் உள்ளதால் ஆசைக் குரியவள். சரீர அணுக்களின் சேர்க்கை மிருதுவாய் உள்ளது.

(2) ஆண் ரூபத்தில் நாத விளைவே அமர்ந்து விந்தாய் விளைகின்றது. இவன் நிதான தன்மைக்குரியவன்.

இந்த விந்துவானது மறுபடியும் உச்சிக்குச் செல்வது மனிதனுடைய மரணத்தருவாயில்தான். இந்த விந்துவாகப் பட்டது இரண்டாவது ஸ்தானமான சிரசிற்குச் செல் வதற்குத்தான் மரண அவஸ்தை ஏற்படுகிறது. இந்த சமயத்தில் ஏதோ தன்னுடைய கஷ்டத்தால் தனக்கே தெரியாமல் நெற்றிக்கண் அருகில் கரு வந்தவுடன் சோம வட்டம் தெரிந்து, நெற்றிக் கண்ணை கரு தொட்ட வுடனேயே ஒரு பேரானந்த ஜொலிப்பும், நரம்புகளின் இன்ப சிலுசிலிர்ப்பும் உண்டாகின்றன. இதனால் விந்து ஸ்கலிதமாகி, சூக்குமமும், அறிவும் உடலை விட்டு பிரிந்து விடுகின்றன. இதற்குத்தான் மரணம் என்று சொல்வது. 13 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மரணித்தால் அந்த விந்து விளைவில்லாததால் கண் வழியோ, காது வழியோ, மற்ற எந்த வழியாகவேனும் உயிர் போய் விடுகிறது. அவர்களுக்கு விந்து ஸ்கலிதம் ஆவதில்லை. ஏனென்றால் விளைவில்லாததால் தான். விந்துவின் ஸ்தானம் குடிலை யாகும். குடிலையை உந்தி என்றும் சொல்லலாம். ஆனால் சரீரத்திலுள்ள நாபிக்கு உந்தி என்று சொல்லக்கூடாது. இந்த விந்துவாகப்பட்டது சரீரம் பூராவுமே வியாபித்து இருக்கிறது. ஆனால் அதினுடைய சுய இருப்பிடம் 13 வயது வரை சிரசும், அதற்குமேல் குடிலையுமாகும்.

ஜோதி அல்லது விந்து இல்லையேல் தேஜஸ் இல்லை; உபதேசமும் இல்லை. உபதேசமில்லையேல், உய்யும் வழியு மில்லை. பிறந்து பிறந்து இறக்கவேண்டியதே யொழிய, பிறவியின் பெரு முடிப்பு அறுபடுவதில்லை. பிறந்து, பிறந்து இறந்து இறந்து தளர்வடைய வேண்டியது தான்.

ஜோதி இல்லையேல் ஒன்றுமே இல்லை. எப்பொருளுமே இல்லவே இல்லை.

கருவென்பது ஜோதியின் விளைவு. கடத்தில் ஒரு சிறு இடத்தில் அதாவது ஒப்புயர்வற்ற ஓர் தனி இடத்தில் கரு தரித்தால்தான் ஞானி என்றும், அறிவாளி என்றும் பெயர்.

கருவின் பீடம் மூலம். நினைவு என்பது அக்கினி சொரூபத்தின் குரு. எல்லா நிர்வாகங்களுக்கும் ஜோதி தேவை. அணுவில் பரந்த இருள், ஆதி, நாதம், ஜோதி, குணம் ஆகிய ஐந்தும் ஒன்றறக் கலந்திருக்கின்றன.

தரிசில் விதைத்த வித்து நல்வித்தானால், தருணத்தில் உதவும் தான்.

உருக்கிரும்பை, உருக்கத்தால் உருக்கி உருக்கி, உருவாக்கி, உழுதிட்டு, உள் விதைத்த வித்து உண்மை வித்தே கருவாகும். கருவின் கனமே உணர்வாகும். உணர்வின் பொருளை உச்சியில் உணர்ந்தோர்க்கு, ஒரு குறைவும் ஒருபோதும் இல்லவே இல்லை.

மெய்யுணர்வாளர்களே! ஞாபகம் இருக்கட்டும்.

குண்டலி சக்தி.

இது கருவும் நினைவும் சேர்ந்தது. இதனுடைய இருப்பிடம் மூலாதாரம். இந்த குண்டலி சக்தியை ஆறுதார வழியாக ஆக்கினை ஸ்தானம் கடத்த முடியாது. ஆறுதாரம் என்ற அர்த்தமே வேறு. அதைக் கடத்தும்

வழியும் வேறு. மெய்யுணர்வாளர்களுக்கு இது திரேகத்தில் நாக்குப் பூச்சி போன்று அதினுடைய வழியில் செல்வது அறிவில் தெரியவரும்.

குண்டலி சக்தியின் சூக்குமம் நம் கண் தோற்றத்தில் பார்ப்பதென்ருல், கண்ணுக்கு நேரே ஒரு கெஜ தூரத்தில் ஒரு நாக்குப் பூச்சி அளவில் சிறு வளைவுகளும், சிறு கால்களைப் போன்ற கிளைகளும் $3\frac{1}{2}$ அங்குலம் முதல் 4 அங்குல நீளத்தில் ஒன்று அல்லது இரண்டு தெரிய வரும். இதில் சில பிரகாச அணுக்கள் கசகசா அளவில் இணைந்திருப்பதையும் பார்க்கலாம். இது ஒரே நிலையாய் நிலைத்து நிற்காது. மேல் நோக்கி சென்றுகொண்டே இருக்கும். தோன்றுவதும் பின் மறைவதும் இதன் சகஜம். பக்தர்கள் யாவரும் இதைப் பார்க்கலாம். இது அரூபி தோற்றமே அல்லாது ரூப தோற்றமாகாது. ரூபத்திலுள்ள குண்டலி சக்தியைப் பார்ப்பதென்பது ஞானிகளாகிய மெய்யுணர்வாளர்களுக்குரியது. இதன் விபரம் உணர்வு பிரசங்கத்தில் பார்க்கவும்.

ரசமணி.

நெற்றிக்கண் திறந்து, கரு உச்சிக்கு ஏறி, நாள் செல்லச் செல்ல ஒரு சிறு ஆமணக்கு வித்தைப்போன்று அது உருளுவது அறிவிற்கு உணர்ச்சியாய் தெரியவரும். இதை சிலர் கருநெல்லி என்றும் சொல்லிக்கொள்வார்கள். ஏனென்ருல், தவம் அதிகரித்தால் கருவிழி பருமனுய் உருண்டு தெரிவதுமுண்டு. இதுவும் நெற்றிக்கண் திறந்து சென்ற கருவின் விளைவேயாகும். விளைவிக்கும் தந்திரம்

தெரிந்தவர்களுக்குத் தான் ரசமணியின் நுட்பம் தெரியும். இவர்களுக்கு மரண பயமோ, மரண அவஸ்தையோ இல்லை.

சிலர் பாதரசத்தை வாங்கி அதற்கு வேண்டிய மூலிகைகளைச் சேர்த்து, ரசத்தை மணியாகக் கட்டி விட்டால், நினைத்தது பலிக்கும், இரும்பை தங்கம் ஆக்கி விடலாம் என்று, பெரும் ஆசையால் தங்கள் பொருளைச் செலவழித்துக் கொள்ளுகிறார்கள். அப்படி ரசமே மணியாகிவிட்டாலும், அப்படி ஒன்றுமே ஆவதில்லை.

இந்த சக்தி எல்லாம் 25 வயதுக்கு மேற்பட்டுத் தான் உண்டாகிறது. நூல் அறிவில் இவ்வளவு தெரிந்து கொண்டால் போதுமானது. அனுபவத்திலறிய வேண்டு மென்றால் இச்சபையில் சேர்ந்து, முழு விபரம் தெரிந்து கொள்ளவும்.

அறிவினுடைய அனுபவமும், சாமர்த்தியமும்.

அறிவானது ஓரறிவிலிருந்து ஆறறிவு வரையும் வர, வெகு காலம் கல்பமாக சுழன்று, சுற்றி, அனுபவித்து வருகிறது. ஒவ்வொரு கல்பத்தின் சுற்றின் சுழலால் ஓரறிவிலுள்ள ஜோதிப் பொருளைப் படிப்படியாக உயர்த்தி, ஆறாவது அறிவாகிய மனித ஸ்தூலத்தில் வந்து விந்துவாய் முடிகிறது. அறிவின் சுற்றின் சுழலையும், அதினுடைய அனுபவத்தையும் மிக நுட்பத்திலும் வெகு நுட்பமாக ஆராய்ந்து கவனிக்கும்போது எவ்வளவோ கால அளவு சொல்ல முடியாத சொல்லுக்குள் உள்ளது. அந்த கால அளவு நிர்ணயித்ததை எழுதியும் விடலாம்.

அதை எழுதவும் கூடாது. பெரும் ஆராய்ச்சியின் அறிவாளிகள் மிக நுட்பமான சிந்தனையில் இருந்து இதை ஆராய்க.

என்ன படித்திருந்தாலும், அநேக கலைகளை அறிந்த கலை ஞானியாக இருந்தாலும், கருவின் நிலையறிந்து பார்க்க வேண்டும். நுட்பத்திலும் நுட்பமாக அறிவின் உள்ளும் புறமும் நிறைந்துள்ளது கரு.

அறிவின் குறைவால், அறிவுதான் பிறவி எடுக்கிறது. அறிவு பிறவி எடுத்தாலும், அறிவின் குறையைப் பூர்த்தி செய்ய ஆத்மா வந்து சேருகிறது. ஆத்மா, தனதாற்றலின் நிர்வாகம் பூராவும் அறிவினிடம் ஒப்படைக்கின்றது. அறிவானது நிர்வாகம் ஏற்றுக்கொண்டதும், ஆத்மாவை ஆக்கினைக்குட்படுத்துகிறது.

அணுவணுவாய், அறிவறிவாய், அறிவின் பிரிவும், அறிவின் முடிவும், ஆனதொரு சுழலின் வேகமும், ஆயிரத் தெட்டு மலரால் என்று அறிந்தீர்.

வேகுகின்ற செஞ்சுடரும், வெண்ணிற வெளிச்சமும், அப்பாய், பின் வெப்பாய், உப்பாய் உறைந்த உலகத்தில், வித்தாய் விளைந்து, வித்துக்குள் உள்ளுள்ள வெள்ளைப் பொருளாயும், பின் விந்துவாய் உள்ள கருவும், அருட் பெருஞ் ஜோதியே என்றறியுங்கள்.

ஆத்மாவானது நமது கண்ணிலுள்ள கருவிழிகளின் மத்தியிலுள்ள சிறு புள்ளியின் பருமனுள்ளது. அதாவது ஜலத்தில் ஊறிய சப்ஜா விதை பருமனுள்ளது. இது

தான் பரம ஜீவாத்மா எனப்படும். ஜீவனின் கண், அறிவு. அறிவின் கண் ஐம்புலன்கள். இக்கண்ணுல் கண்டு, அக் கண்ணுல் முடிவு கட்டவேண்டும். அறிவு பெரும் நுட்பம் அடைந்ததும் ஞானக்கண் என்று பெயர் பெறும். அறிவினுல் நுட்பமாக கவனித்தால் ஞானக்கண் விளங்க எதுவாகும்.

பிறவிக்கு முன்னும் பின்னும்.

இணையற்றிருந்தேன், இருந்திருந்து இனியேது செய்வதென்றேங்கினேன், ஏங்கியேங்கிப் பறந்தேன், பறந்து பறந்து விரைந்தேன், விரைந்து விரைந்து வளர்ந்தேன், வளர்ந்து வளர்ந்து பிறந்தேன், பிறந்து பிறந்து எனையான் மறந்தேன், மறந்து மறந்து இறந்தேன், இறந்திறந்து இப்பிறவியில் பிறந்தேன், இனி என்னை அறிவதற்கு ஏங்கினேன், ஏங்கியேங்கி ஏக்கக்கனலால் வாடினேன், வாடி வாடி அருள் நீர் சொரிந்தேன், இரவு பகல் விழித்தேன், ஏதேதோ செய்து முடித்தேன், முடித்ததின் பயனுல் அன்புக்குரிய அன்பனையடைந்தேன், அடைந்து என்னுள், நான் அமர்ந்தேன், அமர்ந்தமர்ந்து ஞான மெய்யுணர்வு அடைந்தேன், அடைந்த உணர்வை அண்டியண்டி அறிவால் அறிந்தேன், அறிந்தறிந்து தெளிந்தேன், தெளிந்து தெளிந்து தேர்ந்ததை உணர்ந்த அன்புக்குரிய அன்பனுல் இப்பதவி பெற்றேன், பெற்றதும் வாரி வாரிக் கொடுத்தேன், கொடுக்கின்றேன், இனியும் கொடுப்பேன், கொடுத்து மொழிந்தேன், மொழிகின்றேன், மொழிந்து மொழிந்து சுகித்தேன், சுகிக்கின்றேன், சுகிப்பேன், சுகித்ததின் பலன், இணையற்றயானே என் மயமானேன்.

மெய்யுணர்வாளர்களே! அன்பும் அறிவும் இன்பமாய் கொண்டீர்கள். அருள் மழை பெய்து, பொருள் மலை விளைந்து, அனுபோக மாலை அணிந்து பூதலமீது புகழோங்கி, புண்ணிய மண்டலமும் கடந்தது நம் பூரணமே. பரிபூரணமாய் உள்ள நாமே நாமாவோம்.

ஒவ்வொருவரும் மிக முக்கியமாக அனுஷ்டிக்கவேண்டிய முறைகளாவன :-

(1) சாப்பிடும்போதும், (2) தூங்கும்போதும், (3) மலஜலம் கழிக்கும் போதும், (4) நன்மையான ஆராய்ச்சியில் இருக்கும் போதும், (5) தன் மனைவி மக்களுடன் சந்தோஷமாக இருக்கும் போதும், (6) தவத்தில் இருக்கும் போதும், மெய்யுணர்வாளர்கள் கவலை, சந்தோஷக் குறைவு, மனக்கஷ்டம், பயம், இல்லாமல் இருந்து கொள்ளவேண்டும். இப்படி ஒரு மாத காலம் பழக்கப்படுத்திக்கொண்டீர்களானல் சகலமும் உங்களுக்கு அனுசரணையாகவே நடந்தேறும். அப்போது ஒவ்வொன்றையும் பூரணமாய் அனுபவித்து முடித்தவர்கள் ஆவீர்கள்.

அறிவைக் கருவால் துளைத்து அதில் நின்று பார்த்தால், அதனல் ஏற்படும் ஆனந்தம் சொல்ல முடியாத சொல்லுக்குரியது. அதுவே பேரானந்தம்—பேரின்பம் எனப்படும்.

அறிவு தெளிந்து தெளிந்து, பின்னும் துலக்கமற தெளிந்து, அறிந்துகொள்வதுதான் ஞானம்.

மெய்யுணர்வாளர்களின் தர்ம உயர்வு.

உலகில் நீங்கள் கண்ணியமான நடை, உடை, சொல், பார்வை, பெருந்தன்மை, தைரியம் கொள்வதுடன், பிறர் குற்றத்தை அனுசரியாமல் எப்போதும் சந்தோஷமாய் இருந்துகொள்ளுங்கள்.

குற்றம் உண்டா? உண்டு. எதுவரை?

நாவில் சுவை உள்ள வரையும், உடம்பில் இரத்தம் உள்ள வரையும், நாலு விரற்கடைத் துணி சரீரத்தை மறைக்கும் வரையும், இனம் தெரியும் வரையும், குற்றம் உண்டு.

நாவில் ஒரு சிறு ரோகிருந்தபோது, நல்ல ருசி அறியாதது போல், பிறரது துவேஷம் சிறிதளவு இருந்தாலும் பேரறிவுக்காளாகமாட்டார்.

கண், காதால், கண்டு, கேட்டு, கொண்ட மாய்கை-தனை, கண், காதால் இனி கண்டு, கேட்டு, அறிந்து, விட்டொழியுங்கள்.

நடந்து, ஓடி, சுமப்பதும், ஆடுவதும், பாடுவதும், படிப்பதும், நுட்ப நூதன பற்பல அறிவினை, சமர்த்தின் சமர்த்தால் சாமார்த்திய வேலைகள் செய்வதும், நாடெல்லாம் கடலேறி சம்பாதிப்பதும் எதற்கென்றால்:- களைப்பை நீக்கி, உல்லாசமாய் இருந்து, பற்பல குணங்களுக்கிணங்கிய காய்கனிகளாகிய ஜோதியின் வெப்பின் சுவைகளையும், வித்தாய் விளைந்த ஜோதிப் பொருளையும் சுகிப்பதற்கே.

பிச்சை எடுப்பதும், பிதற்றுதல் செய்வதும், பேராசை கொள்வதும், ஆணவம் கொள்வதும் எதற்கு? இந்த ஜோதியின் பொருளை அனுபவிப்பதற்கே.

பணிவு, ஆதரிப்பு, பொறுமை, பெருந்தன்மை, இவையெல்லாம் எதற்கென்றால்:- நிதானத்திற்குத் தக்க வாறு, ஜோதிப் பொருளை வாங்க, கொடுக்க, அனுபவிப் பதற்காகவே.

ஜோதிப் பொருளை அந்தந்த அளவில் ஒவ்வொரு வரும் அனுபவிப்பதற்கு வேண்டி நீதிக்குரியது இராஜாங்கம்.

உலக நல்லடியார்களே! நீங்கள் நல்ல சுவையாய் சாப்பிட்டு சந்தோஷமாய் இருக்கும்போது நல்லடியார்களை நினைப்பதுடன் ஒரு பொல்லாத குணமுடையவனையும், அவன் நல்லறிவுக்காளாக வேண்டுமென்று நினைத்துக் கொள்ளுங்கள். அப்போது அவன் நல்லறிவுக்காளாகிறான்.

ஒரு, சிறு, இரு, கண் புள்ளிகளால் நாலுகோடி அடி சமவெளி தெரிவதுபோல், குருசொல் ஒருசொல்லுக் கிணங்கினீர்களானால் சமயகோடானுகோடி நூல்களெல்லாம் தன்னறிவில் தெரியலாமே.

எவனொருவன் தன் மதத்தில் ஒழுக்கமுடையவனோ, அவன், பிறமதத்தைக் குறைசொல்லாதவனாவான்.

எமது மெய்யுணர்வாளர்களே! நீங்கள் பெரும் ஒற்றுமைக்குரியவர்கள். அவ்வொற்றுமையைப் போல் என்றென்றைக்கும் ஏகமனதாய் இருக்கவேண்டும்.

இருப்பீர்கள். நீங்கள் அடைந்திருக்கும் சத்திய மெய்யுணர்வை என் சரீரம் ஒன்றிலிருந்தே தெரிந்து கொண்டீர்கள். இனியும் பலர் தெரிந்து கொள்ளப் போகிறீர்கள். இச்சரீரமோ பல கோடானுகோடி அணுக்களின் ஒற்றுமை என்பது தெரியவரட்டும். அநேக கோடானுகோடி ஆத்மாக்களுக்குரியது ஒரு சத்தியமும், அதன் தத்துவமும். என் இருதய மலர்களே! உங்களுடைய ஒற்றுமையே என்னுடைய சரீரத்திலுள்ள சத்தியத்தைப் பாதுகாப்பதாகும். உங்களுடைய சந்தோஷமே என்னுடைய ஆனந்த அனுபவமாகும். உங்களுடைய அறிவின் பூரணமே என்னுடைய சுய ஐக்கியமாகும். உங்கள் அருள் முக சந்தோஷ செழிப்பு என்றென்றைக்கும் மாறுதிருக்கும். இது நிச்சயம். **ஆகையால் என் பெரும் சந்தோஷ சிறப்புடன் இன்று பிரசங்கம் இனிது முடிவுற்றது.**

(இது தத்துவங்களில் நான்காவது தத்துவமாகும்)

ராஜேஸ்வரி பிரஸ், மதுரை:—44,

பரிபூரண பரஞ்ஜோதியின் உயர்ஞான சபை.

எல்லாச் சபைகளுக்கும் குருஸ்தானம் வகிப்பவர்

ஞானவள்ளல் பரஞ்ஜோதி மஹான் அவர்களே.

தலைமை சபை — மதுரை.

தலைவர்: மெய்யுணர்வாளர்: M. G. நாயுடு, (Retd. Teleg.)
காரியதரிசி: ,, B. சுந்தரராஜ நாயுடு, (Clerk, Municipal Office)
உபகாரியதரிசி: ,, T. B. தேசிகாச்சாரி.
பொக்கிஷதார்: ,, M. N. குப்புசாமி ஐயர், (Cloth Merchant)
ஆடிட்டர்: ,, S. முத்துசாமி பிள்ளை, (Revenue Officer, Madura Municipality)

நிர்வாகஸ்தர்கள்.

1. மெய்யுணர்வாளர்: வெ. முத்து சேர்வை, (Land lord)
2. ,, ப. இபுருஹிம் சாஹிப்.
3. ,, P. இராக்கப்பக்கோன், (Land lord)
4. ,, வெ.சின்னத்தம்பிசேர்வை, (L. F. Auditor)
5. ,, நாட்டாமை R. சுப்பய்யர்.
6. ,, G. மஸ்தான் சாஹிப், (Mill Owner)
7. ,, K. செல்லையா பிள்ளை.
8. ,, ச. கந்தன், (Mill Supervisor)
9. ,, M. V. கிருஷ்ணய்யர்

(நெ. 1, மேல வடம்போக்கித் தெரு, மதுரை.)

கிளை சபை — சென்னை.

தலைவர்: மெய்யுணர்வாளர்: C. கோவிந்தராஜுலு முதலியார், (Chief Cashier S. V. O. C. Madras)
பொக்கிஷதார்: ,, V. N. குமாரசாமி, (Prop. சாயத்தொழிற்சாலை)
காரியதரிசி: ,, N. சின்னைய செட்டியார், (Land lord)
உபகாரியதரிசி: ,, N. R. ராஜகோபால் நாயுடு, (Proprietor. Confectionery Works)

நிர்வாகஸ்தர்கள்.

1. மெய்யுணர்வாளர்: கோவிந்தராஜுலுநாயுடு, (Retd. Naval. Ofr)
2. ,, G. ஆராவமுது பிள்ளை, (Clerk M. S. M. Ry.)
3. ,, P. வரதராஜுலு பிள்ளை, (Land lord)
4. ,, C. D. கன்னியப்ப சுவாமிகள், (Land lord)
5. ,, M. ஜம்புலிங்க முதலியார், (Land Lord & Merchant)
6. ,, H. நயினுமுஹம்மது காதிரி.

(390, திருவொற்றியூர் ஹைரோட், சென்னை.)

பரஞ்ஜோதி மஹான் அவர்கள்

அருளிய உயர்ஞான நூல்கள்.

1. **ஒருமொழி.**
2. **பேரறிவு.**
3. **பரஞ்ஜோதி.**

அச்சில்:—

ஞானக்கண்.

ஷை புத்தகங்கள் கிடைக்குமிடம்:—

1. C. D. கன்னியப்ப சுவாமிகள்,
290, சைனாபஜார்,
ஜி. டி. மதராஸ்.

2. N. R. ராஜகோபால் நாயுடு,
9, மலைப்பெருமாள் தெரு,
ஜி. டி. மதராஸ்.

3. பரிபூரண பரஞ்ஜோதியின் உயர்ஞான சபை.
மதுரை & சென்னை.

4. V. N. குமாரஸ்வாமி,
216, திருவொற்றியூர் ஹைரோட்,
தண்டையார்பேட்டை, சென்னை.

5. எல்லா ஹிக்கின்பாதம் புக்ஸ்டால்களிலும், சுதேசமித்திரன் புக்ஸ்டால்களிலும் கிடைக்கும்.